157

...M. 2445.

உ

சிவமயம்.

10 OCT 1930

வீரசைவம்.

திங்கள் வெளியீடு.

மலர் உ | பிரமோதூத—புரட்டாசி 1930—செப்டம்பர் | இதழ் ௯

க. கடவுள் வணக்கம்

உ. ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்

௩. ஸ்ரீபசவேச விஜயம்

௪. திருமுருகாற்றுப்படை

௫. சிவானுபவம்

௬. வீரசைவ மதமும், வைஷ்ணவ மதமும்

௭. தீக்ஷையே மோக்ஷ சாதனம்

௮. தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர், வீரசைவ நிலயம், முசிரி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி, துறையூர்—1930.

சென்னைச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி.

ஓர் பதவியைக்கருதிய தேர்தல் என்பது பயனற்றதெனச் சிலர் கருதலாம்; அங்ஙனமன்று. தேர்தல் என்பது தமது தகுதியையும், பிறர் தகுதியையும், நாட்டிற்குச் செய்ய வேண்டிய நன்மையையும், நாட்டாரது மனப் பான்மையையும் அளந் தறிவதற் கேற்றதோர் அளவு கருவியா மாதலின் அத்துறையில் நிற்பது பயனுடையதேயன்றி பிறிதொன்றன்று. இம்முறையில் சென்னைச் சட்ட சபைத் தேர்தலில் திருச்சினாப்பள்ளி ஜில்லா கிராமத் தொகுதிக்கு வேட்கையுடையராக நின்றவர் ஐவர். அவருள் தக்க முயற்சியைச் செய்தவர் மூவர். அவருள் வெற்றி பெற்றார் இருவரே. அவ்விருவராவார் தமிழ்நாட்டன்பரும், தகுதியாளருமாகிய மின்னாம்பள்ளி ஜமீன்தாரும், ஜில்லா போர்டு உதவித் தலைவருமான திருவாளர் **K. C. M.** வெங்கடாசல ரெட்டியாரவர்களும், திருச்சி வழக்கறிஞரும் ஜில்லா போர்டு தலைவருமாகிய திருவாளர் **T. M.** நாராயணசாமி பிள்ளை, M. A., B. L. அவர்களுமாவர். இவ்விருவர்களும் தமிழ் நாட்டிற்கும், தண்டமிழ் மொழிக்கும், தமிழர்க்கும் பல நன்மைகளைச் செய்துவந்ததும், வருவதாக உறுதிகூறியதும், பல தகுதியுடையாரை நட்பாகக் கொண்டதுமே இத்தேர்தலில் வெற்றி பெற்றதற்குச் சிறந்த காரணங்களென்னலாம். இத்தகுதியுடையார் இருவரும் நமது வீரசைவ சமூகத்தாருக்கும் நமது மகா சங்கத்திற்கும் பேருதவி புரிபவராதலால் இவ்விருவர்களது வெற்றிக்கு வீரசைவ சமூகத்தார் பெரிதும் மகிழ்ச்சி யுறுகின்றனர். இன்னார்க்கு இன்னும் பல துறையிலும் வெற்றியும், நீண்ட ஆயுளும், செல்வப் பெருக்கமும் உண்டாகுமாறு இறைவன் இன்னருள் புரிவாராக!

இங்ஙனம்,

வீரசைவ சித்தாந்த சங்கத்தார்.

157
10 OCT 1930

உ

சிவமயம்.

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர்	பிரமோதூத—புரட்டாசி.	இதழ்
உ.	1930—செப்டம்பர்.	௯.

(கடவுள் வணக்கம்.)

1 *பஞ்சானந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.

2 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன்.

3 வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4 பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றேன் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5 மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றுரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.



ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்

திருப்பேரூர்

ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்

இத்தண்டமிழ் நாட்டின்கண் பண்டைய தவப்பயனால் முழு முதற்கடவுளாகிய சிவபெருமானுடைய திருவருளை நிரம்பப்பெற்று

அவதாரஞ்செய்து வீரசைவ சமயத்தை விளக்கமுறச்செய்த பெரியார் களுள் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளும் பெறற்கரும் பெருந்தகையராவர். இப்பெரியார் தொண்டை நாட்டிலே பாம்பரை வீரசைவ மரபிலே தோன்றிச், சமயாசார முறைப்படி சிவதீக்ஷை முதலியன செய்விக்கப் பெற்று இஷ்டலிங்க நிஷ்டாபரராய்த் தம்மரபினர்க்கோர் வழித்துணை யாய் விளங்கியவர்; வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்து தென்றமிழ்ச் சுவையை ஆரச்சுவைத்துத் தம் மாணுக்கர்கட்குதவும் பேராசிரியராய் மிளிர்ந்தவர். இத்தகவுடையார் திருத்துறையூர் பெரியமடம் ஸ்ரீமத் சிவப்பிரகாசசுவாமிகள் சிவானுபவச் செல்வராக விளங்கினமை கண்டு அவர்களை ஞானசாரியராகக் கொண்டனர் என்றும், விருத்தாசலம் ஸ்ரீமத் குமாரதேவ சுவாமிகளைப் பக்குவமுணர்ந்து ஞானேபதேசம் புரிந்து ஆட்கொண்டார் என்றும் நூல்முகத்தெழுதிய சரித்திர வாயி லாக அறிகின்றோம். இப்பெரியோரேத்தும் பெருந்தகவுடையார், பிறவிப்பிணியைக் கடந்து வீட்டின்பத்தினை நுகரும் விருப்பமுடை யார்க்கு அருந்துணையாகக் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்னும் நான்கு சிறந்த நூல் களை அருளிச் செய்திருக்கின்றனர். இந்நான்கு நூல்களும் அறிவு நூலுணர்ச்சியுடையார் பலராலும் போற்றப் பெறுகின்றன. இவற் றிற்குத் திருப்பேரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் சிறந்ததோருரை எழுதி யிருக்கின்றார்கள். இவ்வுரை யாசிரியரே, நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் காலத்திற்குப் பிற்பட்ட காலத்து உரை யாசிரியர்களுள் தலைசிறந்து விளங்குபவர். நூலும் உரையும் தகுதி யுடைப் பெரியாரால் எழுதப் பெற்றிருப்பினும் பிற்காலத்தே தோன் றிய வேறுபட்ட கொள்கையை யுடையாராய பதிப்பாசிரியர் சிலரால் ஏற்றவிடங்களில் மாறுபட்டிருத்தலை அறிவுடையார் ஆராயாமலிரார். வீரசைவ சமயம் எத்துறையினும் மறந்தும் உயிர்க்கொலைபுரியா வுயர் நிலைச் சமயமாக விளங்குதலின் கொலைமறுத்தல் முதலிய நான்கு நூல்களும் வீரசைவர்கட்குச் சிறப்பு நூலாகவும் ஏனையோர்க்குப் பொதுநூலாகவும் விளங்குகின்றன. கொலை மறுத்தலைப்பற்றி நூல் செய்த ஆசிரியர்களுள் இப்பேரூர் பிரானே தலைசிறந்து விளங்குகின் றனர். கொலைமறுத்தல் என்னும் இந்நூல், வேதாகமங்களைப் பிரமா ணங்களாகக் கொள்ளும் சைவர் முதலாகிய அகச்சமயிகளும் உலோ காயதர் முதலிய புறச்சமயிகளும் கூடிய ஓர் சபையின்கண் தாரகை

நடுவண் தண்மதி விளங்கினாற்போல் விளங்கும் வீரசைவ சமயாசாரியரையடுத்துப் பக்குவமுடையா ரொருவர் வினவ விடை பகர்வது போல வினவிடை (சம்பாஷணை) வடிவாகச் செய்யப் பெற்றுள்ளது. இந்நூல் 22 செய்யுட்களை யுடையதாயினும் விரிந்த பொருளைத் தன்னகத்தே கொண்டிருத்தலின் கற்போர்க்குக் கண்ணாடியென விளக்கத் தக்கது.

விநாயக வணக்கம்.

இன்ப மாய தருதிடை யோங்கவும்
துன்ப மாயது தூரத்து ணீங்கவும்
முன்ப ராபரன் மொய்குழ லோடணைந்து
அன்பி னீன்றவோ ரானையைப் போற்றுவாம்.

இதன் கருத்து:—இந்நூல் செய்து முடியுமளவும் சொல் நயம் பொருள் நயங்களாகிய நூல் நயங்கள் (நூலின்பங்கள்) இடையறாது பெருகிக்கொண்டு வரவும், தாபத்திரயங்களினால் வரும் இடையூறுகள் தம்மகத்தே தோன்றாது நீங்கவும், தம்மை வழிபட்டார்க்கு இடையூற்றை நீக்கவும், வழிபடாதார்க்கு இடையூற்றைக் கொடுக்கவும் வல்லராய யானைமுகமுடைய மூத்த பிள்ளையாரை வணங்குவாம் என்றபடி. "முன்பராபரன் மொய்குழலோடணைந்து அன்பினீன்றவோரானை" என்றதனால் அருவப்பிரணவமாகிய சத்தியும் சிவமும் கலத்தலால் தோன்றிய உருவப்பிரணவ வடிவமே யானைமுகமுடைய விநாயகவடிவமென்பது பெற்றாம்.

எடுத்துளவெச் சமயிகளு முலகருஞ்சா ரோரவையி னிடையிற் றோன்றும்
உடுத்தனைச்சூழ் தரவிளங்கு மதியினுயர் சைவரைவந் தொருவன்றாழ்ந்தீண்டு
அடுத்தபல வுயிர்த்தோற்றத் துயர்வுதாழ் வருளுகென வவனைத் தேற்றித்
தடுத்தபுறச் சமயிகட்குத் தாமுறுத்தி நிறுத்துகின்றார் தம்பா லூற்றம்.

இதன் பொருள்:— (வேதாகமங்களைக் கொள்ளும் சைவர் முதலாகிய உட்சமயிகளென்றும் அவற்றைக் கைக்கொள்ளாத உலோகாயதன் சமணன் பௌத்தன் முதலிய புறச்சமயிகளென்றும்) எடுத்துச் சொல்லப்பட்ட பல சமய வாதிகளும், இடையிற் றோன்றும் பல கற்பனைச்சமயிகளும், இவர்களல்லாத இலௌகிகரும் கூடியிருந்த ஓர்

பேரவையின்கண் நக்ஷத்திரக்கூட்டங்கள் தன்னைச்சூழ நடுவே விளங்கும் கலைநிரம்பிய சந்திரனைப்போலத் தோன்றா நிற்கும் ஒரு வீரசைவ சமயாசாரியரைப் பக்குவமுடையா னொருவன் வந்தணுகி வழிபாடியற்றி நின்று, கலைநிரம்பிய பெரியோரே! இவ்வுலகின் கண்ணுள்ள பற்பலவாக வேறுபட்ட உயிர்த் தோற்றங்கள் தம்முள் ஒன்றுக்கொன்று உயர்வுந்தாழ்வுமுடையனவாயிருக்குமோ? அனைத்துஞ் சமமாயிருக்குமோ? இவ்வையத்தினைத் தெளிவுற விளக்கவேண்டுமென விண்ணப்பஞ் செய்தானாக; அங்ஙனஞ் செய்தோற்கு அவனுள்ளந் தெளியுமாறு வேதாகமங்களிற் கூறிய முறைப்படி விளக்கித் தெளிவித்தாராக; அங்ஙனந் தெளிவிக்குமளவில், அப்படி நீர் கூறுவது தகாதெனத் தடுத்து நின்ற புறச்சமயிகட்கு எதிர்விடையும் உதாரணமுமாக அச்சபையின்கண் நிறைந்துள்ள இளைஞர் முதல் அறிவானும் வயதானும் முதிர்ந்த பெரியார்வரை யாவர்க்கும் எவ்வாற்றானும் பொருந்துமாறு எடுத்துக்காட்டித் தம்மிடத்துண்டாகிய நிலைமையை நிலைநாட்டுகின்றார் அவ்வீரசைவ சமயாசாரியார் என்றபடி.

இதனால் ஆசிரியர் இந்நூல் விளங்குதற்கோர் தோற்றுவாயும், பற்பல சமயங்களுள்ளும் வீரசைவ சித்தாந்தமே சிறந்ததென்றும், அதன்கண் காணப்பெறும் வாக்கியங்க ளனைத்தும் வேதாகம சாரமாகையால் அவையே பிரமாணமென்றும் கூறினாராயிற்று.

ஊற்றமிகுஞ் சராசரத்து ளுயர்ச்சிசரஞ் சரத்துணரா நரர்தம் முள்ளும்
ஏற்றமுந்தாழ்ச் சியுமுளபல் லுயிர்செகுத்துண் டுடலைவளர்த் திடுங்கீ ழும்மேல்
சாற்றுமுயிர்க் கொலைபுரிதல் துயர்நெடுநாளென் றுமுடல் தான்பொய்
[யென்றும்
தேற்றமிக்கேன் றுயிர்தமைவீட் டினுமவற்றி னுயிர்புரக்குந் நீதி லோரே.

இ-ள்., சராசரமெனப்படும் தாவர சங்கமங்களுள் அறிவின் உயர்ச்சியினாலே தாபரங்களினும் சங்கமமே உயர்வென்று சொல்லப்படும். அச்சங்கமங்களுள்ளும் மனிதரே பகுத்தறிந்து உலகவின்பங்களை யனுபவித்தலால் உயர்வுடையராவர். அம்மனிதருள்ளும் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் உளர். அங்ஙனம் உயர்ந்தோர் யார்? தாழ்ந்தோர் யார்? என்னில், அறிவுடைய மக்களாய்த் தோன்றியும்

பலவுயிர்களைக்கொன்று அவற்றின் இறைச்சியை யுண்போர் தாழ்ந்தோரெனப்படுவர். உயிர்க்கொலையாகிய தீவினை ஆன்மா, நித்தியமாதலால் அதனைத் தொடர்ந்து நின்று நெடுநாள் வருத்துமென்றும், உடல் அநித்தியமாதலின் இறைச்சியை யுண்டு அவ்வுடலை வளர்க்கத் தொடங்கல் நீர்க்குமிழிக்குப் பூண் கட்டுதலோடொக்கு மென்றும் தெளிவடைந்து, பிறிதோர் சீவனாலே தமக்கு அழிவு நேருவதாயினும் அதனைக் கொல்லாது காக்கும் குற்றமற்ற கருணையுடையோரே உயர்ந்தோர் எனப்படுவர் என்பது.

இதனால், சராசரங்களுள்ளும் மனிதரே உயர்ந்தோர்; அவருள்ளும் உயிர்க் கொலை புரியாதோரே உயர்ந்தோராவர் என அறியக் கிடக்கின்றன. (தொடரும்).

ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B. A., L. L. B., வழக்கறிஞர், பெங்களூர்.

நமது வள்ளலாகிய பசவேசரிடம் சாதி வேறுபாடு கருதாது ஆண் பெண் என்னும் பால் வேறுபாடு கருதாது யாவரையும் ஒப்ப நோக்கிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உயர்ந்த நோக்கம் எவ்வாறு வேரூன்றி நின்றதோ அவ்வாறே அரண்மனைப் பெருச்சாளியாகிய சுயநலப்பிரியரிடம் சாதி வேறுபாடு பால் வேறுபாடு கருதும் தாழ்ந்த நோக்கம் அகலாதிருந்தது. எத்துணை நாட் பழகினும் பசவேசரது அருங் குணம் அக்கயவரிடத்து உண்டாகுமோ? எத்துணை நாள் பாலில் முழுகவிட்டுக் காய்ச்சினும் மயக்கரி வெள்ளியாமா? பாம்பிற்குப் பால்வார்த்து வளர்க்கினும் அது படுவிஷத்தைத் தானே கொடுக்கும்! என் செய்வர்! கேதுவென்னும் பாம்பு தன்னை விழுங்கி மறைக்கவரினும் மறையுமளவும் சந்திரன் உலகத்திற்கு ஒளியைத் தருதல்போல நம் பசவேசரோ பகைவராயினும் தமக்குத் தீங்கு செய்யுமளவும் தம்மாலான உதவியை அன்னார்க்கும் பரிந்து செய்து வந்தனர். இதுவன்றோ சான்றோர் கடன்! இத்தகைப் பெரியார் மாறுபட்ட காலந்தோறும் தோன்றுவதனாலன்றோ இவ்வுலகியல்

இடையறுது நின்று நிலவுகின்றது! இங்ஙனம் நமது வள்ளலார் தமது கடமையாகிய சீர்திருத்தத்தைச் செய்துவரவே பகைவராயினோர் பொறாமை மேலிட்டால் அரசனிடங் கோட்சொல்லி அமைச்சர்மேல் அரசர்க்கிருந்த அன்பைக் குறைத்தற்கு பலவாறு முயற்சிக்கலாயினர்.

இங்ஙனமிருக்கும் நாளில் வேதியர் குலத்தே தோன்றிய மதுவரசன் என்னும் பிராமணோத்தமர் ஒருவர் சிவபூசையும் சிவத்தியானமுமே சிறந்த தவமெனவும், சிவனடியாரைப் பூசித்தலே சிறந்த தவப் பயனுமெனவும், "சங்கமந் தனக்கோரு சாதியுன்னினான் அங்கலிங்கத் திற்கும் அஃதையுன்னினான்" என்னும் உண்மை மொழியை வேத மொழியெனவும் பாராட்டி வந்தனர். அனுபவத்திலும் கைக்கொண்டு காட்டத் துணிந்தனர். அம்மதுவரசர் என்பார் தமது அழகினும் அறிவினுஞ் சிறந்த புதல்வியின் மணப்பருவத்தை யுணர்ந்து தக்கதோர் நாயகனைத் தேடலாயினர். யாரும் தமது புதல்வியின் குணத்திற்கும் செயலுக்கும் ஒத்தவராகக் காணப்பெற்றிலர். பறையர் குலத்தே தோன்றிய அருளையர் என்பார் பலபிறவியிற் செய்த சிவ புண்ணிய விசேடத்தால் புலைத்தன்மை கெடப் புலமைத் தன்மை தலையெடுத்து நிற்பக் குணமென்னுங் குன்றேறிய பெரியாராய் விளங்கினர். அவர் அன்பே நிரம்பிய சிவபக்தராய்க் காணப்பட்டார். அவரது முகமாகிய தாமரையில் சிவமணங்கமழத்தொடங்கிற்று. அன்னாரைக் கண்ட அறிவுடையார் யாரும் குலத்தைக் கருதாது குணத்தைப் பாராட்டுங் குணமுடையாராயினர். அந்த அருளையர் மனைவியாரும் அவர்க்கிணங்க அருளுருக் கொண்டவராய் விளங்கினர். அவ்விருவர்பாற் றோன்றிய அவரது புத்திரரும் அன்பும், அறிவும், அழகும் நிரம்பியவராய் விளங்கினர். அருளையர் பெற்ற அருட்கன்றாகிய அப்புதல்வரும் மணப்பருவம் நிரம்பப்பெற்றனர். அறிவிலார் யாரும் அவரை மருளர் என்பர். அறிவுடையார் யாரும் அவரை அருளையர் என்பர்.

இங்ஙனம் வாழும் நாளில் மதுவரசன் என்னும் அந்தணர் தலைவர் அருளையரது அருங்குணங்களை யுணர்ந்து அவரது புதல்வற்குத் தம் மகளைக் கொடுக்கத் துணிந்து மணம் பேசிவரச் சில முதியோரை விடுத்தனர். அருளையரோ உலகியலுக்கு அஞ்சினராயினும் மதுவரசரது உண்மையன்பிற்கு உடன்படலாயினர். நல்லோரவையில்

ஸ்ரீபசவேசர் முதலிய பெரியோர் முன்னிலையில் திருமணமும் வேத விதிப்படிச் செவ்வனே நடைபெற்றது. அன்புடையார் யாரும் உலகம் நல்வாழ்வு பெற்றதெனை வாழ்த்துரை கூறினர். வன்புடையார் யாரும் உலகியல் அழிந்ததெனக் குறைகூறிப் பிதற்றுவாராயினர். இவ்வாறு நடந்த திருமணச் செய்தியைக் கோளுரைக்குங் கொடுமையாளர் சிலர் விரைவிற் சென்று அரசன்பாற் கூறத்தொடங்கினர். அவருள் கோண்டிக மஞ்சண்ணன் முதலிய சிலர் அரசே! இழிந்த புலையற்கு அந்தணர் மகளைக் கொடுத்தலாகிய அடாதசெயல் நடத்தற்கு பசவண்ணனாகிய முதலமைச்சரே காரணமென்றனர். அரசன் மனம் புண்படும்படி பசவேசர்மேலும் மதுவரசர் அருளையர்மேலும் பல பழிமொழி கூறினர். செவியைக் கண்ணாகக்கொண்டு நாடும் அரசற்கோ கட்செவியினும் கடுங்கோபமூண்டது. விச்சலமன்னன் உடனே தம் பக்கலிலிருந்த காவலரையனுப்பி அமைச்சரையழைத்து வரக் கட்டளையிட்டனன். அமைச்சரும் கட்டளைக்கு உடன்பட்டு அரசனைக் காணவந்தனர். அரசனோ அமைச்சரைக் கண்டவுடன் கண்சிவக்கக் கடுகடுத்து நோக்கினன். அவ்வமயம் அமைச்சர் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்த சன்னபசவதேவர் அரசனது கோபத்தைத் தணிக்கக்கருதி வினயமாகப் பேசத்தொடங்கினர்.

ஓ பூபதியே! தங்கட்கு அவ்வளவு கோபமேன்? முதலமைச்சர் யாதுகுறை செய்தனர்? பொறுமையிற் கடலனைய தாங்களே கோபித்தால் உலகம் என்ன பாடுபடாது? அவர் கோபத்திற் கிலக்கான குற்றம் யாதும் செய்யவில்லையே. பிறருடைய பொருளை அபகரித்தனரா? அல்லது அரசியலுக்கு மாறான யாதேனும் சட்டமறுப்பைக் கையாண்டனரா? வரிகொடா வியக்கத்திற்கு வழித்துணையாய் நின்றனரா? குடிகளை அடங்கி நடக்காவண்ணம் ஏதேனும் கோளிழைத்தனரா? அவர் இராஜபக்தியிற் சிறிதும் வழுவி நடக்கும் வழக்கமுடையவரல்லவே. அவர் குடிகட்கு ஐவகைத் துன்பத்தை நீக்கி ஆக்கமளித்தலில் ஆற்றலுடையவர் அல்லவா? அவர்பால் குறையுளதாகத் தாங்கள் குறிப்பிடின் அவர் உடனே பரிகரித்துக்கொள்ளும் அருங்குண முடையவரல்லவா? என்று வினயத்துடன் வேண்டிநின்றனர்.

விச்சல மன்னன் :—நாடுநாடாக விளங்குவது பிராமணர்களுடைய சத்கருமத்தாலல்லவா? உயர்ந்த வருணத்தாராகிய பிராமணனொருவன் இழிந்த குலத்தானுகிய பறையனொருவனுக்குத் தமது பெண்ணை மணஞ்செய்து கொடுப்பது வழக்கத்திலுண்டா? இவ்வித அடாத செய்கையைச் செய்வது உலகத்தில் எங்கேனுமுண்டா? என்று வினவினன்.

சன்னபசவ தேவர் :—அரசரேறே? ஒருவர் சிவபக்தராய்ச் சிவ குலத்தவரான பின்னர் அவரது பூருவகுலத்தை எண்ணுதல் தகுமா? கஸ்யபர், துர்வாசர், வியாசர், வால்மீகி முதலான மகரிஷிகளெல்லாம் எக்குலத்தினரோ! வசிஷ்டர் அருந்ததி என்ற உத்தமர்களும், ஜமதக்கினி இரேணுகை என்ற சிரேட்டர்களும் பிறந்த குலம் யாது? மேற்குலத்தினரும் அஃதல்லாத குலத்தினரும் முற்காலத்தில் மணஞ் செய்துகொள்ளவில்லையா? அவ்விருவருடைய சம்மந்தம் சிறந்த அறங்களை நிலைநாட்டி உலகத்திற்குப் பெரும் பயனளிக்கவில்லையா? ஓர் நிலம் ஓர் காலத்தில் பண்பட்ட கழனியாக விளங்கலாம். அதுவே மற்றொரு காலத்தில் பாழடைந்த மணற்பாங்காகலாம். கரும்பும் நெல்லும் விளைந்த நன்செய்யே ஒருபொழுது முட்செடி முளைக்கும் புன்செய்யாகலாம். கள்ளி வயிற்றினும் அகிற் பிறக்கும். பல்விலைய முத்தமும் உவர்க்கடலிற்றோன்றும். நல்லார் பிறக்குங் குடியை யாரறிவார்? ஆதலால் ஒருவரைப் பிறந்த குலங்கருதி உயர்ந்தவரென்றுவது அல்லது தாழ்ந்தவரென்றுவது எப்பொழுதும் ஒருபடித்தாய் எண்ணுவது அறிவுடையார் செயலாகுமா? தாங்கள் இக்கொள்கையில் நன்கு ஆராய்தல்வேண்டும். கோபங் குணத்தை மறைக்கும் இருட்படாம் அன்றோ!

விச்சல மன்னன் :—சன்னபசவரே! நீர் சிவபக்தரைப் புகழ்ந்து பேசியது போதும். வருணாச்சிரம தருமங்களையும், மத தருமங்களையுங் கெடுத்து இக்கலியாணபுரியைப் பறைச்சேரியாக்கினவரா பெரியவர்? இக்கொடிய தீயை அவிக்காது விடுவேனுயின் யானே அரசன்? யானே மனு நெறி வேந்தன்? யானே அறத்தை நிலைநாட்டுபவன்?

இங்ஙனம் இருவர்க்கும் சம்பாஷணை நடந்துகொண்டிருக்கையில் காவலர் மதுவையர் அருளையர் என்பாரை அழைத்து வந்தனர்.

அவ்விருவரும் அரசனைக் காணவேண்டிய முறைப்படி கண்டு ஒதுங்கி நின்றனர். அவ்விருவரது வருகையோ அரசனது கோபத்தீய்க்கு நெய் சொறிந்தாற் போலாயிற்று. சிறிதுநேரம் ஒன்றும் உரையாடாது கடுக நோக்கினன். உண்மை நெறியில் நின்ற மனத்தெளிவுடையார் உலகமே நிலைதடுமாறினும் அஞ்சாரே! அன்னவர் அரசனது கோபத்தீயா தம்மைச் சுட்டொழிக்குமென அஞ்சுவர்? அஞ்சுதலில்லாத மனவுறுதியுடைய மதுவரசர் மன்னனை நோக்கிப் பின்வருமாறு கூறத் தொடங்குகின்றார்.

மன்னர் மன்னரே! உமக்கேன் இவ்வளவு கோபம்? என் பெண்ணையல்லவோ எனக்கிசைந்த உத்தமர்க்குக் கொடுத்தேன். என் மகளும் அக்காதலனை மணக்க மனமிசைந்தனளேயன்றி வேறுபட்டிலளே. காதலன் காதலிகள் கருத்தொருமித்ததன்றோ கைவந்தவின்பம். இம் மணத்தால் கேடு நேருவதாயின் யானும் என் மகளுமன்றோ கெடுவோம். தங்கட்கு யாதொரு குறையுமின்றாதலின் கோபந்தணிவதே உங்களனைய அரசர்க்குத் தகுதியாகும்.

விச்சல மன்னன் :—மதுவரசனே! நீயோ குலத்தில்பிராமணன். உனது பெண்ணையோ பறையற்குக் கொடுத்துக் குலத்தைக் கெடுக்கத் துணிந்தனை! இதுவா உமது அறிவின்செயல்? பக்தியின் பெருமை?

மதுவரசன் :—நரேந்திரரே! சரணரைப் பறையன் என்றும் சொல்ல உமது நாவெழுந்ததா? இதனைக்கேட்ட யானே கெட்டேன்! இத்தீவினைக்குக் கழுவாயுமுளதோ! பறையர் என்போர் யார்? அந்தணர் என்போர் யார்? குருலிங்க சங்கமங்களின் உண்மை நிலையை அறியாதவரே பறையர். பிறரை நிந்திப்பவரே நீசர். பசுவைக் கொல்பவரே புலையர். பொய்யுரைப்போரே கடைஞர். பிறர் மனையைச்சேருபவனே பஞ்சமன். நெறிதவறிப் பிறர்க்குத் தீங்கிழைப்பவனே பாதகன். இங்ஙனமிருப்ப யாரை நீர் பறையன், என்று உரைத்தீர்?

இதைக்கேட்ட அரசன் சாந்தியடையாது அவர்க்குத் துன்பம் விளைவிக்கக் கருதினன். நல்லோர்க்குத் தீமையும் நன்மையாய் அன்றோ முடியும். (தொடரும்.)

திருமுருகாற்றுப்படை.

க. திருப்பரங்குன்றம்.

(முன் தொடர்ச்சி)

பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்டு
உருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிற் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வேன்றடு விரற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்.

பதவுரை:—பார்—நிலவுலகத்தின்கண், முதிர்பனிக்கடல்—முதிர்ந்த குளிர்ச்சியுடைய கடல், கலங்க உள்புக்கு — தன்னிலை குலையும்படி உள்ளே சென்று, (ருஎ) இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை — (சூரபன்மாவினுடைய) மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரியவுடல், அறுவேறு வகையின் — அற்று வேறு வேறும் வகையால், அஞ்சுவரமண்டி — அச்சந்தோன்ற மிக்குச்சென்று, (சஎ) உலறிய கதுப்பின் — காய்ந்த மயிரினையும், பிறழ்பல் — வரிசை பிறழ்ந்த பல்லினையும், பேழ்வாய் — பெரியவாயினையும், சுழல்விழிப் பசுங்கண் — (கோபத்தாற்) சுழலும் விழியை

யுடைய பசிய கண்ணினையும், சூர்த்த நோக்கின் – கொடுமை செய்த பார்வையினையும், கழல்கண் கூகையொடு – பிதுங்கிய கண்ணையுடைய கூகையோடே, கடும்பாம்பு தூங்க – கடிய பாம்பு தூங்குதலையினால், பெருமுலை அலைக்கும் காதின் – பெரிய முலையை வருத்துகின்ற காதினையும், பிணர்மோட்டு – சருச்சரையையுடைய வயிற்றினையும். உருகெழு செலவின் – கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினை யும் உடைய, அஞ்சுவருபேய் மகள் – கண்டார்க்கு அச்சந்தோன்று கின்ற பேயாகிய மகள், குருதிஆடிய – உதிரத்தைப்பூசிய, கூர்உகிர் – கூரிய நகத்தையுடைய, கொடுவிரல் – கொடிய விரலாலே, கண் தொட்டு உண்ட – கண்ணைத் தோண்டி யுண்ணப்பட்ட, கழிமுடைக் கருந்தலை – மிக்க முடைநாற்றத்தையுடைய கரிய தலையை, ஒள்தொடி தடக்கையின் ஏந்தி – ஒளி பொருந்திய வளையலையுடைய பெரிய கையிலே எடுத்து, வெருவர – (அவுணர்க்கு) அச்சந்தோன்ற, வென்று அடு – (வஞ்சியாது) எதிர் நின்று கொல்லுகின்ற, விறற்களம்பாடி – வெற்றிக்களத்தைப்பாடி, தோள் பெயரா – தோளையசைத்து, நிணம் தின் வாயள் – இறைச்சியைத் தின்கின்ற வாயினை யுடையளாய், துணங்கை தூங்க – துணங்கைக் கூத்தாட, (சகூ) சூர் முதல் – சூர பன்மாவாகிய தலைவனை, தடிந்த – கொன்ற, சுடர்இலை நெடுவேல் – எரிகின்ற இலைவடிவாகச் செய்யப் பெற்ற நீண்ட வேலாயுதத்தினாலே, அவுணர் நல்வலம் அடங்க – (பின்னும் அச் சூரபன்மாவையொழிந்த) அவுணருடைய நல்ல வெற்றி இல்லையாம்படி, கவிழ்இணர் – கீழ்நோக் கின பூங்கொத்துக்களையுடைய, மாமுதல் தடிந்த – மாமரத்தை வெட் டின, மறுஇல் கொற்றத்து – குற்றமில்லாத வெற்றியினையும், எய்யா நல்இசை – ஒருவராலும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையு முடைய, செவ்வேல் சேய் – செந்நிறமான வேலையுடைய சேய்.

பொழிப்புரை:—நிலத்தின்கண் முதிர்ந்த குளிர்ச்சியை யுடைய கடல் தனது நிலைகுலையும்படி உள்ளேசென்று; (சூரபன்மாவினுடைய) மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினை யுடைய ஒன்றாகிய பெரிய வுடல் அற்று வேறுவேறாம் வகையால் அச் சந்தோன்ற மிக்குச்சென்று; காய்ந்த மயிரினையும், வரிசை பிறழ்ந்த பல்லினையும், பெரியவாயினையும், கோபத்தாற்சுழலும் விழியையுடைய பசிய கண்ணினையும், கொடுமை செய்த பார்வையினையும், பிதுங்கிய

கண்ணையுடைய கூகையோடே கடியபாம்பு தூங்குகையினால் பெரிய முலையை வருத்துகின்ற காதினையும், சருச்சரையையுடைய வயிற்றினையும், கண்டார் உட்குதல் பொருந்தும் நடையினையும் உடைய, கண்டார்க்கு அச்சந்தோன்றுகின்ற பேயாகிய மகள் உதிரத்தைப் பூசிய கூரிய நகத்தையுடைய கொடிய விரலாலே கண்ணைத் தோண்டியுண்ணப்பட்ட மிக்க முடைநாற்றத்தையுடைய கரியதலையை ஒளிபொருந்திய வளையலையுடைய பெரிய கையிலே எடுத்து, அவுணர்க்கு அச்சந் தோன்ற வஞ்சியாது எதிர்நின்று கொல்லுகின்ற வெற்றிக் களத்தைப் பாடி, தோளையசைத்து இறைச்சியைத் தின்னுகின்ற வாயினையுடையளாய்த் துணங்கைக் கூத்தாட; சூரபன்மாவாகிய அத்தலைவனைக் கொன்ற எரிகின்ற இலைவடிவாகச் செய்யப்பட்ட நீண்ட வேலாயுதத்தினாலே பின்னும் அச்சூரபன்மாவை யொழிந்த அவுணர்களுடைய நல்ல வெற்றியில்லையாம்படிக் கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய மாமரத்தை வெட்டின குற்றமில்லாத வெற்றியினையும் ஒருவராலும் அளந்தறிய வொண்ணாத நல்ல புகழினையுமுடைய செந்நிறமான வேலினையுடைய சேய்.

விரிவுரை :—கதுப்பினையும் பல்லினையும் வாயினையும் கண்ணினையும் பார்வையினையும் காதினையும் வயிற்றினையும் நடையினையும் உடைய பேயாகிய மகள் தலையையேந்தி வாயினையுடையளாய்ப் பாடித்துணங்கைக்கூத்தாடவென முடிக்க. இதனால் பேய்மகளிர் தன்மை கூறிய வாறாயிற்று.

கடல்கலங்க உள்புக்குச் (சரு) சூர் முதலினுடைய ஒரு பேரியாக்கை (ருள) அறுவேறு வகையின் அஞ்சுவரமண்டிச்சென்று (ருஅ) பேய்மகள் துணங்கைக்கூத்தாடும்படி (ருகூ) அச்சூர்முதல் தடிந்த வேலாயுதத்தாலே (சகூ) பின்னும் அவுணர் நல்வலமடங்க (ருகூ) மாமுதல் தடிந்த கொற்றத்தினையும் (சுo) நல்லிசையினையுமுடைய சேய் என முடிக்க.

கவிழிணர் மாமுதல் தடிந்த என்றது — சூரபன்மாவைத்தடிந்த பின்னரும் அவுணரெல்லாரும் தம்முடன் எதிர்ந்தார் வலியிலேபாதி தங்கள் வலியிலே கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்ததொரு மாமரத்தை வெட்டிய என்றபடி. சூரபன்மனை மாமர வடிவாக

நின்றான் எனவும் புராணக்கூற்றுகள் வேறுபடுகின்றன. சங்கவிலக்கியங்கட்கும் மொழிபெயர்ப்புப் புராணங்கட்கும் உள்ள வேறுபாட்டை உய்த்துணர்ந்தமைத்துக்கொள்க.

துணங்கை – பேய்க்கூத்து, "முடக்கிய விருகை பழுப்புடையொற்றத்–துடக்கிய நடையது துணங்கையாகும்" என்றதனாலறிக.

'சேய், என்னும் ஆண்பாற் பொதுப்பெயர் முருகன் என்னும் சிறப்புப்பொருளைக் குறித்தற்குச் செவ்வேல்' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டதாதலின் 'சூர்முதறடிந்த சுடரிலை நெடுவேல்' என்றதனையே பின்னரும் கூறியதெனக் கருதிக் கூறியது கூறலாம் குற்றமெனக் கொள்ளற்க.

கணவன் (௫) மார்பினன் (௧௧) சென்னியன் (௪௪) ஆகிய சேய் (௫௧) என ஒரு பொருள் குறித்த வேறு பெயராய் நின்றனவாதலின் முருகப்பெருமானது பெருமை இதுகாறுங் கூறியவாறாயிற்று.

சிவானுபவம்.

ஸ்ரீமத் சச்சிதானந்த அன்னதான சுவாமிகள்,

(ஆம்பூர் மடாலயம்.)

(முன் தொடர்ச்சி.)

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில."

'உலகப் பொருள்களுள் யாதொன்றினும் விருப்பும் வெறுப்பும் அற்றநிலை நம்மிடத்து உண்டானவிடத்து இன்பம் நிலைபெறுமேயன்றி அவ்விரண்டும் நம்பால் இருக்குமளவும் சுகப்பிராப்தி உண்டாவதில்லை என நாம் நன்கு அறிந்திருந்தாலும் அதை நாம் நமது அனுபவத்திற் கொண்டுவர முயலுவதில்லை. நம்மைச் சுற்றிலும் உண்மையான மனிதன் ஒருவனுமில்லை. ஒருவன் உண்பதற்கும் உடுப்பதற்கும் குறைவில்லாத செல்வவானாயிருப்பினும் அவனுக்கு ஏதாவது தீராநோய் ஏற்பட்டிருக்கும்; அதனாலவன் உணவருந்த

முடியாமலும் இருப்பன். மற்றொருவன் பசிப்பிணியால் வருந்து பவனுயிருப்பன்; அவனுக்கு அருந்த அன்னங் கிடைப்பதும் அரிதா யிருக்கும். ஒருபெருஞ் செல்வன் மக்கட் பேறில்லையேயென வருந்து கின்ருன். மற்ருெருவனே பல பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஆதரிக்கவியலாமல் வருந்திநிற்கின்ருன். இங்ஙனம் ஏன் வேறுபட் டிருக்க வேண்டுமென்ருல் ஒரே நாணயத்தின் இருபுறங்களினும் ஒரு புறம் தலையாகவும், மற்ருெருபுறம் எழுத்தாகவும் இருக்கக் காண்கின் ரேம். நமக்கு இவ்விரண்டனுள் ஒன்று தேவையாயின் மற்ருென்றை யும் உடன்கொண்டே தீரவேண்டும். அதுபோலவே நாம் இன்பம் அடைய விரும்பினல் அதனுடன் துன்பத்தையும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருத்தல் வேண்டும். இவ்விரண்டனுள் நாம் ஒன்றைவிரும்பி ஞல் மற்ருென்று நம்மை யறியாமலே வந்துநேரும். ஆனல் இவ் விஷயம் நமக்குப் பிடிப்பதில்லை. அதனலேயே உலகின்கண் நாம் ஒருபால் இன்பத்தை விரும்பியே புலன்களில் அகப்பட்டுத் தவிக்கின் ரேம். இதனல் உண்மையான நோக்கங்களை மறந்து போய்ப் புலன் கட்கு அடிமைப்பட்டு உழல்வதே நந்தலையெழுத்தாக முடிகின்றது.

இந்நில வுலகின்கண் சுக துக்கங்களின் கற்பனை எத்தன்மைத் தென நோக்குவோமானல் அவற்றிற்கு அளவேயில்லை. இப்போலிச் சுகங்கட்கு எப்பொழுதும் அடிமைப்பட்டு உழல்வதோ அறிவுடை யார்க்கு எத்துணையும் பொருந்தாது. நம்மை யாராவது புகழ்ந்தால் ஆனந்தங் கொள்கின்ரேம். அவரே நம்மை யிகழ்ந்தால் துன்புறு கின்ரேம். இதுவே நம்பாலிருக்கும் பெருங்குறை. நாம் நமது வாழ்நாளனைத்தையும் சற்று உற்று நோக்குவோமாயின் அவற்றுள் பெரும்பாலும் அடிமைத் தனமே பொலிந்து விளங்கக் காண்கின் ரேம். நாம் என்றும் வயிற்றிற்கும், புகழுக்கும், பெருமைக்கும் மீளா அடிமைகளா யிருக்கின்ரேம். இப்படிப்பட்ட அடிமைத்தனம் நம்பால் மிகுதியும் நிலைத்திருப்பதனலேயே உண்மையான ஈசுவர பக்தி நம்மை விட்டு வெகு தூரத்தில் விலகியிருக்கின்றது. இந்த பக்தியை வேறுபிரிக்கும் இழிகுணங்கட்கு நாமே இடங்கொடுக்கின் ரேம். கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும் கிள்ளைக்கு இட்டிருக்கும் பொற்சிலம்பு முதலியவை நமது பார்வைக்கு இன்பமாயிருப்பினும் அதற்கு இன்பமில்லாததோடு துன்பமும் சம்பவிக்கின்றது. அதைப்

போலவே ஒருவன் பந்தத்தில் அமிழ்ந்திருந்தாலும் அது நமக்கு இன்பமனுபவிப்பதாகக் காணப்படுகின்றது. இவ்வடிமைத் தனத்தி லிருந்து நீங்குதற்கு முயற்சிப்போமானுல் அப்பொழுதுதான் நாம் அனுபவிக்கும் போலிச் சுகங்களின் அற்பத்தன்மை நமக்குப் புல னுகும். இப்போலிச் சுகங்களின் இயற்கையை யறிந்த ஒருவனே தன் தலையில்விழுந்த நெருப்புக் கட்டியை விரைவில் அகற்ற முயல்ப வன்போல் போலிச் சுகத்தினின்றுந் தப்பித்துக்கொள்ள விரைவில் முயற்சிப்பன். அப்பொழுதே உண்மைப்பொருளில் நாட்டந்தோன் றும். இத்தகைய கருத்திற்கே சிவானுபவம் என்றும் சிவயோக சந் தானம் என்றும் பெயர்.

வீரசைவ மதமும் வைஷ்ணவ மதமும்.

ஆஸ்தான வித்துவான்
சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

வீரசைவ மதத்தாபஞசாரியருடைய சித்தாந்தப்படி ஸ்ரீராமா நுஜாசாரியார் தமது சித்தாந்தத்தை உலகத்தின்கண் பிரசாரஞ்செய்த னர் என்று அறியக்கிடக்கின்றது. அஃதெங்ஙனமென்னில், ஸ்ரீமத் பஞ்சாசாரியர் சிவசூத்திர, பிரம சூத்திரங்களின்மேல் சக்திவிசிஷ் டாத்வைத சித்தாந்தத்தை தாபித்தனர். இராமாநுஜாசாரியர் பிரம சூத்திரங்களின் மேல் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை எழுதினர். பஞ்சாசாரியர் பிரமத்தில் சக்தி வைசிஷ்டியத்தைப் போதித்தனர். ஆனுல், இராமாநுஜரோ ஜகத் வைசிஷ்டியத்தைப் போதித்தனர். பஞ்சாசாரியர் சக்தியானது ஸ்தூலசிதசிதாத்மகம் சூக்ஷ்மசிதசிதாத் மகம் என்று இரண்டு பிரிவாக இருக்கின்றதென்று போதித்தால் இராமாநுஜாசாரியார் ஜகத்துஸ்தூல சிதசிதாத்மகம் சூக்ஷ்மசிதசிதாத் மகமென இரண்டு பிரிவினையுடையதெனப் போதிக்கின்றனர். இருவ ருடைய சித்தாந்தமும் விசிஷ்டாத்வைதமாயிருந்தும் சிற்சில வேறு பாட்டை யுடையனவா யிருக்கின்றன. பஞ்சாசாரியர் சிவனே பரப் பிரமமென்று போதித்திருக்க இராமானுஜர் விஷ்ணுவே பரப்பிரம மென்று போதித்தனர். பஞ்சாசாரியர் சிவ பெருமானுலே சகல

சராசராத்மகமான உலகம் படைக்கப்பட்ட தென்றுரைக்க இராமா நுஜர் விஷ்ணுவினுலே படைக்கப்பட்ட தென்றனர். இவ்விரண்டு மதாசாரியர்களும் உலகத்தின் சத்தியத்துவத்தை (அழியாத் தன்மையை) ஒப்பிக்கொள்ளுகின்றுர்கள். அத்தியாச வாதத்தைக் கண்டிக்கின்றுர்கள். பஞ்சாசாரியர் பார்வதி சகிதனுன பரமேசுவரனைப் பூசிக்கவேண்டுமென்று போதித்தால் இராமாநுஜர் திருமகள் கொழுநனுன நாராயணனைப் பூசிக்க வேண்டுமென்கின்றனர். பஞ்சாசாரியர் பரசிவ ரூபமான இஷ்டலிங்க மூர்த்தியைக் கணப்பொழுதாகிலும் விடாது எப்பொழுதும் உடலில் தரித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று போதித்தால் அதற்குப் பதிலாக விஷ்ணுவின் ஆயுத ரூபமான சங்கு சக்கரங்களை உடலில் விலகாது எப்பொழுதுந் தரிக்க வேண்டுமென்று தப்தமுத்திராங்கன பத்ததியை நிலைநாட்டினர் இராமாநுஜாசாரியர். பஞ்சாசாரியர் கோமயத்தினுலுண்டான பஸ்மத்தைத் திர்யக் திரிபுண்டரமாகத் தரிக்கவேண்டுமென்றருள, இராமாநுஜர் மண்ணினுலுண்டான நாமத்தை ஊர்த்துவ திரிபுண்டரமாகத் தரிக்கவேண்டுமென்று போதித்தனர். பஞ்சாசாரியர் உருத்திராக்க மணிகளைத் தரிக்கவேண்டுமென்று கட்டளையிட இராமாநுஜர் துளசி மணிகளைத் தரிக்கவேண்டு மென்றனர். பஞ்சாசாரியர் பூசைக்காக வில்வ பத்திரத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டும் என்றுரைக்க இராமாநுஜர் துளிசிதளத்தைக் கொள்ளவேண்டுமென்றனர். பஞ்சாசாரியர் சிவபஞ்சாக்ஷர மந்திரத்தைச் சபிக்க வேண்டுமென் றருள இராமாநுஜர் நாராயண அஷ்டாக்ஷர மந்திரத்தைச் சபிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டனர். பஞ்சாசாரியர் பிறந்த குழந்தைக்குச் சிவசம்பந்தம் இருக்க வேண்டுமென்று இலிங்கதாரண, பஞ்சாக்ஷர மந்திரோபதேசங்களைச் செய்யவேண்டுமென்று ஆணையிட இராமாநுஜர் அக்குழந்தைக்கு சீத சங்கு சக்கிர தாரண நாராயணுஷ்டாக்ஷரீ மந்திரோபதேசத்தைப் புரியவேண்டு மென்றனர். பஞ்சாசாரியர் 8-வது வயதில் சாதி சமஸ்கார ரூபமான உபநயனத்தையும், மத சமஸ்கார ரூபமான தீக்ஷையையும் போதித்தாற்போல இராமாநுஜரும் இந்த இரண்டு சமஸ்காரங்களையும் போதித்தனர். பஞ்சாசாரியர் பிராமணன்முதல் சண்டாளன்வரை யாவரும் தத்தம் சாதிக்கேற்றவாறு இலிங்கதாரணம், விபூதி ருத்திராக்க தாரணங்களினுல் தூய்மையராகி வருணுச்சிரம தருமங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று

போதித்தாற்போல இராமாநுஜரும் யாவரும் சங்கு சக்கிர ஊர்த்துவ புண்டரங்களினால் தூய்மையராகி வருணாச்சிரமங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்றனர். பஞ்சாசாரியர் தமது மதத்திற்கு "வீரசைவம்" என்ற பெயரை யிட்டாற்போல இராமாநுஜர் தமது மதத்திற்கும் "வீரவைஷ்ணவம் அல்லது ஸ்ரீவைஷ்ணவம்" என்னும் நாமத்தை யிட்டனர். பஞ்சாசாரியர் சிவாகமங்களே பரமபவித்திரமான பிரமாண கிரந்தங்களென்று எடுத்துக்காட்ட இராமாநுஜர் பாஞ்சராத்திராகமங்களே பிரமாணமென்று எடுத்துரைத்தனர். பஞ்சாசாரியர் விதவையான பெண்கள் தலைமயிரைக் களைந்துவிடக் கூடாதென்றும், ஒருபொழுதுண்ண வேண்டுமென்றும், காஷாயவத்திரத்தைத் தரிக்க வேண்டுமென்றும் நாயகன் இறந்த பின்னர் பரமசிவனே பதியென்று பாவித்து மற்றவற்றை விடவேண்டுமென்றும் போதித்தாற் போல இராமாநுஜரும் விதவைகள் கேசத்தைக் களையலாகாதென்றும், ஒருபொழுதே யுண்ண வேண்டுமென்றும், செகப்பு ஆடையை யுடுக்க வேண்டுமென்றும், நாராயணனையே பதியென்று பாவித்து மற்றவற்றை விடவேண்டு மென்றும் போதித்தனர். பஞ்சாசாரியர் (ஆசாரிய சாம்பிரதாயகர்களுக்கே) குருவருக்கத்தவர்கட்கே பெருமை கொடுத்தாற்போல இராமாநுஜரும் அப்படிப்பட்டவர்க்கே மகிமை கொடுத்தனர்.

இப்படிப்பட்ட விஷயங்களை ஆலோசித்துப்பார்த்தால் பஞ்சாசாரியார் உலகத்தில் சிவபக்தியைப் பிரசாரஞ்செய்யவேண்டுமென்னும் நோக்கங்கொண்டிருந்தாற்போல, இராமானுஜாச்சாரியாரும் உலகத்தில் விஷ்ணு பக்தியைப் பரவச்செய்யவேண்டுமென்னும் நோக்கத்தால் வீரசைவ சித்தாந்த ஆசாரங்களையே வேறு ரூபமாக்கிக்கொண்டு தமது சித்தாந்தத்தை நிலைநாட்டினரெனக் காணப்படுகின்றது. பஞ்சாசாரியரது சித்தாந்தத்தைப் பார்த்து இராமானுஜர் தமது சித்தாந்தத்தைத் தாபித்தனரோ? அல்லது இராமானுஜருடைய சித்தாந்தத்தைப் பாரத்துப் பஞ்சாசாரியர் தமது சித்தாந்தத்தைத் தாபித்தனரோ? என்ற ஆசங்கை படிப்பவர்க்குத் தோன்றலாம். இந்த ஐயப்பாடு விலகவேண்டுமானால் அந்தந்த ஆசாரியருடைய கால நிச்சயமே முக்கியமாக வேண்டற்பாலதாகின்றது. ஆதலினால், அக்கால ஆராய்ச்சியைப்பற்றிப் பின்னர் விவரிப்பாம்.

மேலே கூறிய வாற்றால் வீரசைவ மதத்திற்கும் வீர வைஷ்ணவ மதத்திற்கும் இருக்கத்தக்க வொற்றுமை வேற்றுமைகளைப் பற்பல காரணங்களினால் விளக்கியிருப்பதை நேயர்கள் படித்து அதன் உண்மையை யறியாமலிரார். ஸ்ரீமத் பஞ்சாசாரியருடைய சித்தாந்தத்தை யனுசரித்து ஸ்ரீ இராமாநுஜ ஆச்சாரியர் தமது சித்தாந்தத்தை உலகத்தின்கண் நிலைநாட்டினரோ அல்லது இராமாநுஜாது சித்தாந்தத்தை யனுசரித்துப் பஞ்சாசாரியர் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டினரோ என்ற ஐயப்பாட்டினை நீக்கி உண்மையை ஈண்டு விளக்குகின்றேன்.

இராமானுஜாச்சாரியர் கி-பி 1108-ல் பிறந்தனரென்று அவரது ஜீவிய சரித்திரத்தால் தெரியவருகிறது. அதனால் இற்றைக்கு அவர் பிறந்து 821 வருஷங்களாகின்றனவென்று உறுதியாகின்றது. இவரது சித்தாந்தத்தை யனுசரித்தே பஞ்சாசாரியர் தமது சித்தாந்தத்தைப் பிரசாரஞ்செய்தனரென்று கூறுவோமானால் ஆதி மதத்தாபகரான ஸ்ரீமத் பஞ்சாச்சாரியர் 800 வருஷங்களுக்குப் பிற்பட்டவரென்று கூறவேண்டிய சமயம் நேரிடுகின்றது. இக்கூற்று ஆகாயத்தாமரை போல்வதொன்றும். ஏனென்றால் ஸ்ரீமத் பஞ்சாச்சாரியர் உலகத் தோற்றத்தின் தொடக்கத்திலேயே பரமசிவத்தின் பஞ்சமுகங்களினின்றுந் தோன்றி கிருதம், த்ரேதம், துவாபரம், கலியுகங்களின் முதலில் பூமண்டலத்தில் புகழ்பெற்ற சோமேஸ்வரம், சித்தேஸ்வரம், இராமநாதம், மல்லிகார்ஜுனம், விஸ்வநாத லிங்கங்களில் அவதரித்து வீரசைவ சித்தாந்தத்தைத் தாபித்து உலகம் போற்றும் பெரியாராக விளங்கினமை சிவாகமாதிகளில் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றது. ஸ்வயம்புவாகமத்தில் ஸ்ரீமத் பஞ்சாச்சாரியரது உற்பத்திக் கிரமத்தைப் பரமசிவன் பார்வதிக்கு:—

"ப்ரவக்ஷ்யாமி பவித்ருஞ்ச ஸ்ருணுதஜ்ஜனனக்கிரமம்,
ஸ்ரீமத் ரேவண ஸித்தஸ்ய கொல்லிபாகி புரோத்தமே,
சோமேச லிங்காஜ்ஜனன மாவாசக் கதளீபுரே
தத்வந் மருளசித்தஸ்ய வடக்ஷேத்ரே மகத்தரே
சித்தேச லிங்காஜ்ஜநநம் ஸ்தாநமுஜ் ஜையினிபுரே
சுதா குண்டாக்ய சுக்ஷேத்ரே மல்லிகார்ஜுன லிங்கத:
ஜநநம் பண்டிதார்யஸ்ய நிவாஸ: ஸ்ரீகிரேளசிவே
த்ராக்ஷா ராமாக்ய சுக்ஷேத்ரே இராமநாதாக்ய லிங்கத:

ஏகோராமஸ்ய ஜநந மாவாசஸ்து ஹிமாலயே
காஸ்யாம் விஸ்வேச லிங்காச்ச விஸ்வாராத் யஸ்ய ஸம்பவ:
ஸ்தானம் ஸ்ரீகாசிகாக்ஷேத்ரே ஸ்ருணு பார்வதி சாதரம்
ஏதேயுக சதுஷ்கேது பஞ்சாராத்யா யதாவிதீ
மம லிங்கமுகோத்பூதா லோக விஸ்ருத கீர்த்தய:"

இந்தவிதமாக நான்கு யுகங்களிலும் இவ்வாச்சாரியர்கள் அவதரித்த வரலாற்றினை விளக்கமாக உபம்தசித்திருக்கின்றான். இன்னும் பல சிவாகம வாக்கியங்களை யாராய்ந்து பார்த்தால் இவர்கள் காலாதீதர்க ளென்றும் நித்திய ரென்றும் சித்தமாகின்றது. மற்றும், இந்த ஆச்சாரியர் ரம்பாபுரி, உஜ்ஜையினி, ஹிமவத் கேதாரம், ஸ்ரீ சைலம், காசி இந்தப் பஞ்ச புண்ய க்ஷேத்ரங்களில் பஞ்ச தர்ம பீடங்களை உலகத் தோற்றத்தின் தொடக்கத்திலேயே ஸ்தாபிக்க அப்பீடங்கள் அநாதி காலமாக இராஜாதிராஜர்களால் போற்றப்பெற்று இதுவரை அளவிறந்த புகழுடன் மறைவுபடாமல் விளங்கிக்கொண்டிருக்கிற தோற்றம் அறியாதார் எவருமிலர். இப்பீடங்களுக்குப் பண்டைக்காலத்தரசர்கள் அநேக தானசாசனங்களை எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். இற்றைக்கும் அச்சாசனங்கள் அப்பீடங்களில் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இற்றைக்கு 5000 வருஷங்களுக்கு முன்னிருந்த ஜனமேஜய பூபாலன் தனது சமகாலத்திருந்த ஹிமவத்கேதார பீடாதிபதிகளாகிய ஆனந்தலிங்க ஜங்கமர் என்ற மகாசுவாமிகளுக்கு மந்தாகினி, க்ஷீர கங்கா, மதுகங்கா, ஸ்வர்க்கத்வார கங்கா, சரஸ்வதி, மந்தாகினி நதிகள் கூடுகின்ற இடைப்பிரதேசத்திலிருக்கின்ற ஸ்ரீகேதார க்ஷேத்திரத்தைத் தனது தாய் தந்தையர் சிவலோகப்ராப்தி யடையும்பொருட்டு ஸ்ரீகேதாரேஸ்வரருடைய சந்நிதியில் யுதிஷ்டிர சகாப்தம் 89 பிலவங்க வருடம் மார்கழி மாதம் அமாவாசையும் சோமவாரமும் சூரிய கிரஹணமும் கூடிய சமயத்தில் பொன்னீருடன் தானங்கொடுத்து ஓர் சாசனத்தை யெழுதிக்கொடுத்திருக்கிறான். இந்தச் சாசனம் மேற்படி பீடத்திலிருந்து வருகிறது. இந்தப்பீடத்தின் பெருமை இப்படிப் பட்டதென்று எழுத வெழுத்திலடங்காத் தன்மையது. இங்கு 141 கிராமங்கள் இப்பீடத்திற்கு மானியங்களாயிருக்கின்றன. இமாலயப் பிரதேசத்தில் புகழ்பெற்று விளங்கும் டெகரி மகாராஜர் இந்தப்பீடத்தின் சிஷ்யரா யிருக்கின்றார். அன்றியும் உதயபுரம், ஆஸ்மீரம்,

நேபாளம் முதலிய பன்னிரண்டு தேசங்களின் அரசர்கள் வருடந் தோறும் காணிக்கையைக் கொடுத்து வருகிறார்கள். அந்நாட்டில் பிராமணர்முதல் நான்கு வருணத்தவரிடத்தும் இந்தப் பீடாதிபதிகளே தமது அதிகாரத்தை நடத்திவருகிறார்கள். இந்தப் பீடத்தின் தொன்மையையும் அளவற்ற பெருமையையும் பிரிடிஷ் இராஜாங்கத்தார்கண்டு இம்மடாதிபதிகள் பாரதநாடெங்கும் வேண்டிய 72 விருதுகளுடன் புறப்பாடு செய்யலாமென்று உத்தரவளித்துள்ளார். இஃதன்றியும் காசி பீடத்தின்கண்ணும் பல பண்டைய தானசாசனங்களிருக்கின்றன. பண்டைக் காலத்தில் காசியை யாண்ட ஜயநந்த தேவன் என்ற மகாராஜன் விக்கிரமார்க்க சகாப்தம் 631 கார்த்திகை மாதம் 11-ம்நாள் காசிமடத்தின் பசுக்கள் மேய்வதற்காக பீடாதிபதிகளாகிய ஸ்ரீமல்லிகார்ஜுன ஜங்கமரென்ற சிவயோகிகளின் பாத கமலங்களில் சில ஜெமீன்களை தானம்செய்து தாமிர ஏட்டில் ஓர் சாசனத்தை எழுதிக்கொடுத்திருக்கின்றான். இச்சாசனம் இற்றைக்கு 1356 - வருஷத்த தாகின்றது. இச்சாசனம் இப்பொழுதும் காசி பீடத்தி லிருந்துவருகின்றது. இதன்றியும் பூர்வத்தில் நேபாளத்தை யாண்டிருந்த விஸ்வமல்ல நிருபதி என்ற மகாராஜன் நேபாள தேசத்தின் பாதகாம் என்ற கிராமத்திலிருக்கும் காசி பீடத்தின் சாகாமடமாகிய ஜங்கமவாடி மடத்திற்கு விக்கிரமவருஷம் 692 ஜேஷ்டசுத்தம் 8-ம்தேதி அநேக பூமிகளை தானங்கொடுத்து ஒரு சமஸ்கிருத சிலா சாசனத்தை யெழுதிக் கொடுத்துள்ளான். இச்சாசனம் நேபாள மடத்தில் இப்பவுமிருக்கிறது. இச்சாசனம் பிறந்து 1294 வருஷங்களாகின்றன. கி. பி மூன்றாவது நூற்றாண்டிலிருந்த சைவசிகாமணிகளாகிய பாண்டியராஜர் உஜ்ஜையினி பீடத்தைக்கட்டி ஓர் சிலாசாசனத்தை எழுதிக் கொடுத்துள்ளார். இதுவும் அங்கிருந்துவருகிறது. இம்மாதிரியே பீடங்களனைத்திலும் மிகப் பழமையான சாசனங்கள் பல கிடைத்திருக்கின்றன. இன்னும் இப்பீடங்களைச் சேர்ந்த கர்நாடக தேசத்திலுள்ள குருவர்க்கத சாகாமடங்களின் பழமையை விவரிப்பேன்.

கி. பி. 950 - ல் கர்நாடகத்தை யாண்ட பேமர்டி வம்சத்தின் சாவுண்டராஜன் நீலகண்ட பண்டிததேவர் என்னும் மாகேசுவராருக்குப் பூமிதானஞ்செய்து தாமிரசாசனம் செய்துள்ளான். இவ்விஷயம்

1875-வது ஆண்டில் நிறுவிய பாம்பே ராயல் ஏஷ்யாடிக் சொசைடி பிராஞ்சின் 11-வது ரிபோர்ட்டில் எழுதப்பட்டுள்ளது. அன்றியும் மிஸ்டர் ரைஸ் சாஹேபரால் தொகுக்கப்பட்ட (Mysore Inscriptions) என்ற புத்தகத்தில் சிவமொக்காஜில்லா சிகாரிபுராம்தாலூகா பௌகாவி கிராமத்தில் வெகுகாலமாக ஹிரேமடம், பஞ்சலிங்கமடம், திரிபுராந்தகமடம், வாமசக்திமடம், கோடியமடம் என்ற ஐந்துமடங்கள் இருக்கின்றனவென்றும் முதல் மூன்று மடங்களுக்கே முறையாக மூளிக மதுகேச பண்டிதர், சர்வேஸ்வர பண்டித தேவர், ஞானசக்திதேவர் இப்பெயருடைய சுவாமிகள் கி. பி. 1054-ல் அதிகாரியாய் இருந்தன ரென்றும் இப்பொழுது பௌகாவி கிராமத்தில்கிடைத்த சிலாசாசனங்களால் தெரியவருகிறதென்று எழுதப்பட்டுளது. இவ்விஷயங்களனைத்தையுமாராய்ந்து பார்ப்பதிலிருந்து வீரசைவமத பீடாச்சாரியருடைய காலம் இராமாநுஜருடைய காலத்திற்கு எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்று தெளிவாக அறியக் கிடக்கின்றது. இதனால் ஸ்ரீமத் பஞ்சாச்சாரியரது சித்தாந்தத்தை அனுசரித்து இராமாநுஜாச்சாரியர் தமது சித்தாந்தத்தை நிலை நாட்டினரோவன்றி இராமநுஜரது சித்தாந்தத்தை யனுசரித்துப் பஞ்சாச்சாரியர் தமது சித்தாந்தத்தை நிலைநாட்டினரோ என்ற வினவிற்குத் தக்கவிடையை நுண்ணறிவுடைய வாசகரே ஆராய்ந்து உரைப்பது தகுதியென்று வேண்டுகிறேன்.

தீக்ஷையே மோக்ஷ சாதனம்.

நியாசலக்ஷணம்.

நியாசம் — கரநியாசம், தேகநியாசம், அங்கநியாசம் என மூன்று பிரிவினை யுடையது. நியாசம் எனினும் சுத்தமெனினும் ஒக்கும். இவற்றுள் கரநியாசம் தேகநியாசங்கள் தனித்தனி சிருஷ்டி, திதி, சம்மாரம் என்று மும்மூன்று வகையாக இருக்கின்றன. அங்கநியாசமோ ஒரேவிதமாக இருக்கும். சாதகன் முதலில் கரநியாசத்தையும், அதன்மேல் தேகநியாசத்தையும், அதன் பிறகு அங்கநியாசத்தையும்

செய்யவேண்டும். இவைகளில் கரநியாசலக்ஷணம் சிற்சில கிரந்தங்களில் ஒவ்வொரு விதமாகக் கூறப்பட்டுள்ளது. பாரமேஸ்வராகமத்தில் அங்குஷ்ட (பெரு)விரல் முதலாக கனிஷ்டிகை (சுண்டுவிரல்) கடையாகச் செய்வது சிருஷ்டி ; மத்யமம் (நடுவிரல்), அநாமிகை (மோதிரவிரல்), கனிஷ்டிகை (சுண்டுவிரல்), அங்குஷ்டம் (பெருவிரல்), தர்ஜனி (சுட்டுவிரல்) இந்த முறையாகச் செய்வது திதி ; கனிஷ்டிகை முதல் அங்குஷ்டம் வரையானால் சம்மாரநியாசம்; இவைகளில் கிருகஸ்தன் சிருஷ்டிக் கிரமத்தினாலும், பிரமசாரி ஸ்திதிக்கிரமத்தாலும், சந்நியாசி சம்மார முறையிலும் நியாசஞ் செய்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. வியாசோக்தமான லிங்கபுராணத்தில்—வலக்கை அங்குஷ்ட முதலாக இடக்கை அங்குஷ்ட முடிவாக நியாசஞ்செய்வது சிருஷ்டி ; இதற்கு மாறாக இடக்கை அங்குஷ்ட முதலாக வலக்கை அங்குஷ்ட முடிவாகச் செய்வது சம்மாரம்; இரண்டு கைகளிலும் ஒரே முறையில் அங்குஷ்டமுதல் கனிஷ்டிகைவரைச் செய்வது ஸ்திதி நியாசம் ; இவற்றுள் பிரம்மசாரிக்குச் சிருஷ்டி ; கிருகஸ்தனுக்கு ஸ்திதி ; சந்நியாசிக்கு சம்மாரம் என்று கூறப்பட்டுள்ளது. யோகஜாகமத்தில்—அங்குஷ்டாதி கனிஷ்டாந்தமானால் சிருஷ்டி ; கனிஷ்டாதி அங்குஷ்டாந்தமானால் சம்மாரம்; வலக்கையில் அங்குஷ்டாதியாக இடக்கையில் கனிஷ்டாதியாக ஒரே முறையில் செய்வது ஸ்திதி ; இவற்றுள், கிருகஸ்தனுக்கு சிருஷ்டி ; பிரம்மசாரிக்கு ஸ்திதி ; வானப்பிரஸ்தன், சந்நியாசி முதலியவர்கட்கு சம்மார நியாசமென்று கூறப்பட்டுள்ளது. நிஜகுண சிவயோகிகள்—அங்குஷ்டாதி கனிஷ்டாந்தமானால் சிருஷ்டி ; கனிஷ்டாதி அங்குஷ்டாந்தமானால் சம்மாரம்; மத்திமை, தர்ஜனி, அங்குஷ்டம், கனிஷ்டிகை, அநாமிகை இந்த நீதியானால் ஸ்திதியென்றுப், கிருகஸ்தனுக்கும், மனையாள் இல்லாதவனுக்கும், விதவைக்கும் ஸ்திதி நியாசமும், பிரம்மசாரிக்கு சிருஷ்டி நியாசமும், வானப்பிரஸ்த சந்நியாசிகட்கு சம்மார நியாசமும் உரியனவென்று கூறியுள்ளார்.

இப்படியே வாதுளாகமம், பிரபஞ்ச சாரம், மந்திர ரகஸ்யம், மந்திர தேவதாப் பிரகாசிகை, மந்திர மகோததி முதலான கிரந்தங்களிலும் சிறிது சிறிது வேறுபாடுகள் கூறப்பட்டுள்ளன. இதன்றியும் பீஜாக்ஷரங்களுங்கூட சிருஷ்டி ஸ்திதி சம்மார ரூபங்களினால் வேறு

படுகின்றனவென்று நிஜகுண சிவயோகிகள் கூறுகின்றனர். எங்ஙன மென்றால்—யகாராதி நகாராந்தமானால் சிருஷ்டி; நகாராதி யகாராந்த மானால் சம்மாரம்; சிகாராதி மகாராந்தமானால் ஸ்தி என்பதாக பீஜா க்ஷர வேறுபாட்டை இவர் கூறியுள்ள கிரந்தமல்லாது வேறு கிரந் தத்தில் காணப்படவில்லை. கரநியாசத்தைச் செய்யும்பொழுது ஒவ் வொரு விரலிலுமுள்ள மூன்று மூன்று வரைகளில் முதல் கடைவரை களில் பிரணவத்தையும், இடைவரையில் பிந்து சகிதமான அந்தப் பீஜாக்ஷரங்களையும் நியாசஞ்செய்தல் வேண்டும். ஒவ்வொரு விதமான நியாசத்திலும் விரலின் கீழ் வரையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று பல நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. நிஜகுண யோகீந் திரரோ சிருஷ்டிக்குக் கீழ்வரையிலிருந்து மேல்வரை முடிய என்றும், சம்மாரத்திற்கு மேல் வரையிலிருந்து கீழ்வரை முடிய என்றும், ஸ்திதிக்கு இடை கீழ்மேல் இம்முறையாக நியாசம்செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். அங்குஷ்ட விரலில் தர்ஜனியின் நுனியிலும் மற்ற நான்கு விரல்களிலும் அங்குஷ்டத்தின் நுனியிலும் நியாசஞ் செய்தல் வேண்டும்.

தேகநியாசம் — சிரசு, முகம், கண்டம், இதயம், குஹ்யம், பாதம் இந்த இடங்களில் முறையாக அந்தப்பீஜாக்ஷரங்களைப் பிரணவத்தோடு நியாசஞ்செய்வது சிருஷ்டி ; பாதம் முதல் சிரம் வரையுமானால் சம் மாரம்; இதயம், குஹ்யம், பாதம், சிரசு, முகம், கண்டம் இந்த முறையாக நியாசம்புரிவது ஸ்திதியென்று கொள்ளப்படும். இதன் கண் பிரணவாதி ஷடக்ஷரங்களை முதலில் தெரிவித்தாற்போல பீஜா க்ஷர மாறுபாட்டைச் செய்து நியாசம்புரிய வேண்டுமென்பது நிஜ குணருடைய கருத்து.

பின்னர் பிரணவாதி ஷடக்ஷரங்களை இதயமாதியான இடங்களில் முறையாக நியாசஞ் செய்வதே அங்கநியாசம். தேகநியாசம் அங்க நியாசங்களில் உபயோகிக்க வேண்டிய விரல்களின் முறையை இனி வரும் விதிகளில் அத்துவ சோதனை சொல்லுமிடத்து விவரமாகக் கூறப்படும். நியாச முறைகள் பல வேறுபாடு உடையனவாயினும் வீரசைவர்கள் தமது ஆசாரியர் தீக்ஷா காலங்களில் உபதேசிக்கும் முறைப்படி செய்வதே உத்தமம் என நீலகண்ட சிவாசாரியர் கூறு கின்றார். (தொடரும்).

சந்தா நேயர்களே! சமயாபிமான சீலர்களே!

உலகத்தின்கண் தத்தம் சமூகம் முன்னேற்றமடைய வேண்டு மென்றும், சமயக்கொள்கைகளை அறிந்து பலரும் அனுட்டிக்கவேண்டு மென்றும் அறிவுடையார் பலர் பல துறையாக முயற்சித்து வருகின்ற னர். கல்வி யபிவிருத்திக்கு உழைப்பார் சிலர். கைத்தொழில் விருத் திக்குப் பாடுபடுவர் சிலர். உத்தியோக முறையில் முன்னேற்ற முயற் சிப்பார் சிலர். மாணவர்க் குணவளித்து வருவார் சிலர். விடுதிகட்டி உதவுவார் சிலர். இத்தகையோருக்குத் தட்டியெழுப்பி உணர்ச்சித் தருவது பத்திரிகையேயாதலின் அதுவே முக்கியமானதென்னலாம். அப்பத்திரிகைப் பரப்புதற்குப் பலர் பலவிடங்களில் பிரசாரஞ் செய் தும், அபிமானங்களைக் காட்டியும் பல வேலை செய்துவருகின்றனர். பல அபிமானிகள் நன்கொடை புரிந்தும் வருகின்றார்கள். மதப் பிர சாரகராகும் மடாதிபதிகளும் உதவி புரிந்து வருகின்றார்கள். பத் திரிகை நடத்துவது ஓர் எளிய செயலன்றென்பதை அதில் அனுபவ முடையார் யாரும் மறுக்கார். சென்னையிலும் கர்நாடகத்திலும் நடக் கும் சில பத்திரிகைகட்குப் பல சந்தாதாரர்களிருந்தும் வருவாய்ப் போதாமையால் பெரும் பதவியில் உள்ளார் சிலர் ஆண்டுதோறும் பெரும்பொருள் உதவிவருகின்றனர். அன்னார் அதன்வரவு செலவை யறியாது மயங்கிக் கொடுக்கின்றாரல்லர். பத்திரிகை நடத்தும் நிலை மையோ இங்ஙன மிருப்ப, நமது வீரசைவ சமயாபிமானர்களும், மடாதிபதிகளாகிய பெரியாரும் தமிழ்நாட்டிற்கே அரிதாகத்தோன்றி யிருக்கும் வீரசைவத்தைப் பெருநோக்கத்துடன் பாதுகாவ முன் வாராமலிருப்பது விசனிக்கத் தக்கதே! பத்திரிகை நடத்திப் பொரு ளீட்டும் விருப்பமுடையார் பல கூட்டத்தாரும் விரும்பி ஏற்குமாறு பொதுப்பெயர் புனைந்து அறிவு விளக்கமான பொதுப்பொருளெழுதி வெளியிடுவர். இது சமயப் பிரசாரத்தின் பொருட்டு வெளிவருவ தாதலின் அங்ஙனங் கருதற் கிடமின்றல்லவா? இதனை வெளியிட முன்னின் றாக்கிய பெரியாரும், தொண்டரா யுள்ளாரும், தமது பொறுப்பினைச் செய்து தளராது நின்று நிலைபெறச் செய்வாராக. மரியாதை கருதி முன்பணமின்றி அனுப்பப்பெற்ற சில சந்தா நேயர் களும் இம்மாத இதழைப் பெற்றவுடன் சந்தாத் தொகையை மணி ஆர்டர்செய்து உதவுமாறும், சமயாபிமானிகள் தமது கடமையைச் செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

நிறைவேற்றக் கழகத்தார்.

மகா சங்கத்தின்

வட்டக் காரியதரிசிகட்கும் பொறுப்பாளர்கட்கும்

விஞ்ஞாபனம்.

நமது மகாசங்கத்தின் ஏழாவதாண்டு விழாவை வரும் டிசம்பர் விடுமுறையில் நடத்த வேண்டுமெனப் பலரும் முயற்சிப்பதனால் உறுப்பினர்களிடமிருந்து வசூலாகவேண்டிய இரண்டு வருடத்திய சங்கத்தின் சந்தாத் தொகையைக் கூடிய விரைவில் வசூலித்து முன்னரே அனுப்பிவைத்தல் வேண்டும் என்றும், ஓர் பெரியார் தலைமையின்கண் விசேடமாக நடத்த வேண்டுமெனக் கருதுவதால் ஆங்காங்குள்ள அபிமானர்களிடம் நன்கொடையாக இயன்றதொரு பொருளை வசூலித்தும் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமெனவும், மகாசங்கத்திற்குத் தம்மாலாகும் உதவியை முன்னரே தெரிவித்தல் வேண்டுமெனவும் இச்சங்கத்தார் வேண்டுகின்றனர். உதவி செய்தவர்கள் செய்வதாக வாக்களித்தவர்கள் முதலியோர் விவரம் இப்பத்திரிகையிலேயே வெளியிடலாகும். தங்கள் ஆயுள் நாட்களிலும் பொருளிலும் மிகச் சிறியதொரு பாகத்தை இந்த நன்முயற்சியிலே உதவுவார்களாயின் பெரும் பயனையும் பேரறத்தையும் அடையலாம் என்பதை உறுதிபெறக் கொள்வார்களாக மீண்டும் வேண்டுகின்றனர்.

சங்க வரவு.

கும்பகோணத்தை யடுத்த ஸ்ரீ சுந்தரப்பெருமாள் கோவிலில் **20—9—1930**ல் நடந்த திருச்சி சப்ரிஜிஸ்தரார் ஆபீஸ் தலைமை எழுத்தாளர் திருவாளர் **D.** சந்திரசேகரய்யர் அவர்கள் தமது தந்தையார் துரைசாமி ஐயர் அவர்கள் சமாராதனையில் மகாசங்கத்திற்கு சமர்ப்பித்தது ரூ. 1–0–0. கீழவட்டகை நம்புக்குறிச்சியிலிருக்கும் திருவாளர் கரியமாணிக்கம் சுப்பிரமணிய ஐயர் நாளிது புரட்டாசிமீ 13உ தமது துதியகுமாரன் இலிங்கதாரண வைபவத்தில் மகாசங்க திற்குச் சமர்ப்பித்தது ரூ. 1–0–0. இந்த அபிமான சீலர்கட் இறைவன் இன்னருள் புரிக!

இங்ஙனம்,
தலைமைக் காரியதரிசி.

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா	... ...	ரூ. 25–0–0
ஆண்டுச் சந்தா	... ...	,, 2–0–0
மாணவர்கட்கு ஆண்டுச் சந்தா	...	,, 1–8–0
தனிப்பிரதி	... ...	,, 0–3–0

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு	மாதம் 1-க்கு	... ...	ரூ. 5–0–0
,, ½-க்கு	,,	... ...	,, 3–0–0